செ.வெ.எண்-50 நாள்-25.09.2020

**அரியலூர் மாவட்டம்**

**வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மேற்கொள்ளப்படும் பணி குறித்து ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மேற்கொள்ளப்படும் பணி குறித்து ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (25.09.2020) நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் 149.அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. மேலும், இத்தொகுதிகளில் வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் இரோநெட்டில் (ERONET) மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் படிவங்களை 7 நாட்களுக்குள் கள விசாரணை மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் பணியினை முடிக்க அறிவுரைகள் வழங்கப்பட்டது. எதிர்வரும் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2021-ஐ முன்னிட்டு செய்யப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் மற்றும் முடிக்க வேண்டிய பணிகள் குறித்தும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னூலாப்தீன், கோட்டாட்சியர்கள் ஜோதி (அரியலூர்), பூங்கோதை (உடையார்பாளையம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன், வட்டாட்சியர்கள் சந்திரசேகரன், கலைவாணன், குமரய்யா மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**